குழந்தைக் கவிஞர்

# இனிக்கும் பாடல்கள்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com



குழந்தைக் கவிஞர்


# அழ. வள்ளியப்பா

www.worldtamilacademy.com

## பிறப்பு



குழந்தைகள் உலகம்தான் அரிதாரம் பூசாத அன்பு நிறைந்த பூந்தோட்டம். அதில் வண்டாகச் சுற்றிவந்து, தேன் கவிதைகளைக் குழந்தைகள் நெஞ்சில் தெளித்தவர்; அழகழகான கவிதைகள், பாடல்களுக்குச் சொந்தக்காரர் அழ.வள்ளியப்பா. 1922 ஆம் ஆண்டு, புதுக்கோட்டை மாவட்டம் இராயவரத்தில் அழகப்ப செட்டியார்– உமையாள் ஆச்சி ஆகிய தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். இவருக்கு ‘வள்ளியப்பன்’ என்ற புனைப்பெயரும் உண்டு.



## கல்வி

இராயவரம் காந்தி ஆரம்பப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை படித்தார். பின்னர் இராமச்சந்திரபுரத்தில் உள்ள பூமீசுவரசுவாமி இலவச உயர்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை படித்து முடித்தார். பின்பு மேற்படிப்பைத் தொடரவில்லை.

## திருமணம்



பதிமூன்றாம் வயதிலேயே கவிதை எழுதும் திறன் பெற்றிருந்தமையால் சக்தி இதழில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றார். அங்கு பணியாற்றும் போது வள்ளியம்மை என்பாரைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு ஒரு மகனும், நான்கு மகள்களும் உள்ளனர்.



## பணிகள்

வங்கிப் பணியாளர், கவிஞர், பத்திரிகை ஆசிரியர், குழந்தை எழுத்தாளர் என பல பணிகளை ஆற்றியுள்ளார்.

## எழுத்துப்பணி



அழ.வள்ளியப்பா, பள்ளிப் படிப்பை முடித்தவுடன் கல்லூரியில் மேற்படிப்பைத் தொடர முடியாத நிலையில் வாழ்வாதாரம் தேடி 1940 ஆம் ஆண்டில் வை. கோவிந்தனின் சென்னை சக்தி பத்திரிகை அலுவலகத்தில் காசாளராகப் பணியில் சேர்ந்தார். அப்போது சக்தி இதழின் ஆசிரியராக இருந்த தி.ஜானகி ராமனின் ஊக்குவிப்பின் காரணமாக சக்தி இதழிலேயே எழுத ஆரம்பித்தார். சக்தி இதழில் பணியாற்றும் காலத்திலேயே கலை இலக்கிய நண்பர்களின் நட்பு கிடைத்தது. "ஆளுக்குப் பாதி" என்னும் தலைப்பில் தன்னுடைய முதல் கதையை எழுதத் தொடங்கினார்.

## இதழ்ப் பணி

பாலர் மலர், டமாரம், சங்கு ஆகிய சிறுவர் மாத இதழ்களில், கௌரவ ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். 1951 முதல் 1954 வரை பூஞ்சோலை என்ற இதழிலும், ஓய்வுப் பெற்ற பின் 1983 முதல் 1987 வரை, கல்கி வெளியீடான கோகுலம் என்ற இதழிலும் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இவர் பணியாற்றிய சிறுவர் கலை இலக்கிய இதழ்கள் யாவும் குழந்தைகளைப் படிக்க வைத்து அவர்களைப் படைப்பாளர்களாக மாற்றியது. அவர்தம் படைப்புகளுக்கு இடமளிக்கும் வகையிலும் செயல்பட்டன.




## குழந்தை இலக்கியப் பங்களிப்பு

அழ. வள்ளியப்பா சிறு குழந்தைகளுக்குரிய கதைகள், பாடல்கள், கட்டுரைகள் மற்றும் நூல்கள் முதலியவற்றை மிகுதியாக எழுதியுள்ளார். 11 பாடல் தொகுதிகள், 12 புதினங்கள், 9 கட்டுரை நூல்கள், 1 நாடகம், 1 ஆய்வு நூல், 2 மொழிபெயர்ப்பு நூல்கள், 1 தொகுப்பு நூல் ஆகியவற்றை வெளியிட்டுள்ளார். இவற்றில், 2 நூல்கள் இந்திய நடுவண் அரசின் பரிசும், 6 நூல்கள் தமிழக அரசின் பரிசும் பெற்றுள்ளன. அழ. வள்ளியப்பா, 1944–ல் 'மலரும் உள்ளம்' எனும் தலைப்பிலான முதல் கவிதைத் தொகுப்பு நூலை வெளியிட்டார். 1961–ல் வெளியிட்ட 'சிரிக்கும் பூக்கள்' எனும் கவிதைத் தொகுப்பு, 'குழந்தைக் கவிஞர்' எனும் பட்டத்தை அவருக்குப் பெற்றுத்தந்தது. இவர் பாடிய அம்மா இங்கே வா! வா!, கை வீசம்மா! கை வீசு! ஆகிய பாடல்கள் குழந்தைகள் மத்தியில் மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்துவதாகும்.

ரோஜாச் செடி, உமாவின் பூனை, அம்மாவும் அத்தையும், மணிக்கு மணி , மலரும் உள்ளம், கதை சொன்னவர் கதை, மூன்று பரிசுகள், எங்கள் கதையைக் கேளுங்கள், பர்மா ரமணி, எங்கள் பாட்டி, மிருகங்களுடன் மூன்று மணி, நல்ல நண்பர்கள், பாட்டிலே காந்தி கதை, குதிரைச் சவாரி, நேரு தந்த பொம்மை, நீலா மாலா, பாடிப் பணிவோம், வாழ்க்கை விநோதம், சின்னஞ்சிறு வயதில், பெரியோர் வாழ்விலே சுவையான நிகழ்ச்சிகள் ஆகிய படைப்புகள் மிகவும் புகழ்பெற்றவை ஆகும்.

## தொகுத்த நூல்கள்

1. கேள்வி நேரம்: பெரியோரின் கேள்விகளும் பிள்ளைகளின் பதில்களும்1988

## பதிப்பித்த நூல்கள்

1. நிமிஷக் கதைகள்
2. பாலர் கதைகள்

## மொழிபெயர்த்த நூல்கள்

ரோகந்தாவும் நந்திரியாவும் (கதை); மூல ஆசிரியர்: கிருஷ்ண சைதன்யா; (1972)
எக்காலத்துக்கும் ஏற்ற கதைகள் (கதைகள்); மூல ஆசிரியர்: சாந்தா ரங்காச்சாரி; (1977)

## பிற மொழிகளில் வெளியான நூல்

இவரது 'நம் நதிகள்' என்ற நூலை, தேசீய புத்தக டிரஸ்ட் நிறுவனம் (NCBH) 14 இந்திய மொழிகளில் மொழிப்பெயர்த்து வெளியிட்டுள்ளது பெருமைக்குரியதாகும்.

## வாழ்க்கை வரலாறு நூல்

அழ. வள்ளியப்பா அவர்களின் வாழ்க்கை வரலாறை, "குழந்தைக்கவிஞர் வள்ளியப்பா (வாழ்க்கை வரலாறு)" என்னும் தலைப்பில், முனைவர் பூவண்ணன் நூலாக வெளியிட்டுள்ளார்.

## குழந்தை எழுத்தாளர்கள் சங்கம்

குழந்தைகள் குறித்த கதைகள், பாடல்கள், நாடகங்கள் முதலிய இலக்கியங்களைப் படைக்கும் எழுத்தாளர்கள் பலரைத் திரட்டி 1950 ஆம் ஆண்டு "குழந்தை எழுத்தாளர்கள் சங்கம்" என்ற அமைப்பை உருவாக்கினார். சக்தி வை.கோவிந்தன் இச்சங்கத்தின் முதல் தலைவராக இருந்தார். அவரைத் தொடர்ந்து வள்ளியப்பா இந்த அமைப்பின் காரியதரிசியாகவும், தலைவராகவும் மற்றும் வழிகாட்டியாகவும் பல பொறுப்புகளை ஏற்றுச் செயல்பட்டார். பின்பு காரைக்குடி குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பு வகித்தார்.

## உறுப்பினர்

அழ. வள்ளியப்பா இலக்கியம், நூல், கலை தொடர்பான பின்வரும் குழுக்களில் பங்காற்றியுள்ளார்.

1. தமிழ்நாட்டு அரசினரின் குழந்தை இலக்கிய வளர்ச்சி ஆராய்ச்சிக் குழு
2. திரைப்படப் பரிசுத்தேர்வுக் குழு
3. பாரதீய வித்யா பவன் ஆட்சிக்குழு
4. தேசிய புத்தக டிரஸ்ட் ஆலோசனைக்குழு

## பட்டமும் விருதும்

அழ. வள்ளியப்பா அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விருதுகள் மற்றும் பட்டங்களைப் பற்றி கீழே காணலாம்.

1. 1963 ஆம் ஆண்டில் இலக்னோவில் நடைபெற்ற அகில இந்திய குழந்தை எழுத்தாளர் மாநாட்டில், பதக்கமும் பாராட்டிதழும் வழங்கப்பட்டன.
2. 1982 ல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தினால் "தமிழ்ப் பேரவைச் செம்மல்" என்ற விருதளிக்கப்பட்டது.
3. 'பிள்ளைக்கவியரசு' என்னும் பட்டத்தைச் சென்னை பாரதி இளைஞர் சங்கம் வழங்கியது.
4. காரைக்குடி சர்வதேசக் குழந்தைகள் ஆண்டுவிழாக்குழுவில் 'மழலைக் கவிச்செம்மல்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது.
5. இந்தியக் குடியரசுத் தலைவர்களாகிய ஜாகிர் ஹுசேன், பக்ருதீன் அலி ஆகிய இருவரிடமும் கேடயங்களைப் பரிசாகப் பெற்றுள்ளார்.

## திரைப்பட பாடல்

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, ‘வா ராஜா வா’ படத்தில், ‘கல்லெல்லாம் சிலை செஞ்சான் பல்லவ ராஜா…’ என்ற பாடலை இயற்றி, திரையுலகிலும் தனது தடத்தைப் பதிவு செய்துள்ளார்.

## மறைவு

பால்யத்தின் பசுமை நினைவுகளைப் பாடல்களாக மற்றும் கவிதைகளாகப் படைத்த கவிஞர் அழ. வள்ளியப்பா, மதுரைப் பல்கலைக்கழகத்தின் குழு உறுப்பினர் என்கிற முறையில், ‘குழந்தை இலக்கியத்தை பல்கலைக்கழகத்தில் ஒரு பாடமாக வைக்க வேண்டும்’ என்கிற தீர்மானத்தை வலியுறுத்திப் பேசிக் கொண்டிருந்தபோதே மயங்கி விழுந்தார். பின்னர், சிகிச்சை பலனின்றி 16.03.1989 அன்று இயற்கை எய்தினார்.


# இனிக்கும் பாடல்கள்


| வ. எண் | தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | பால முருகன் | 01 |
| 2. | ஒன்று சேர்தல் | 02 |
| 3. | பார் பார் ! | 03 |
| 4. | அருமை நேரு | 04 |
| 5. | அ, ஆ | 05 |
| 6. | பத்துப் பைசா பலூன் | 06 |
| 7. | எங்கே செல்லலாம் | 07 |
| 8. | வாழைப் பழம் | 08 |
| 9. | என்ன கொண்டு வந்தேன்? | 09 |
| 10. | அண்ணாமலையின் ஆசை | 10 |
| 11. | செடி வளர்ப்பேன் | 11 |
| 12. | வா, மழையே வா | 12 |
| 13. | தங்கமும் சிங்கமும் | 13 |
| 14. | ஆண்டவன் தந்த கை | 14 |
| 15. | சங்கு சக்கரச் சாமி | 15 |

# இனிக்கும் பாடல்கள்


| வ. எண் | தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 16. | யார்? யார்? யார்? | 16 |
| 17. | நிலா நிலா | 17 |
| 18. | தெரியுமா தம்பி? | 18 |
| 19. | கொய்யாப் பழம் | 19 |
| 20. | வெள்ளைக் கொக்கு | 20 |
| 21. | அன்னம் | 21 |
| 22. | புகை விடாத இரயில் | 22 |
| 23. | உதவும் கத்தி | 23 |
| 24. | வால் | 24 |
| 25. | எட்டு மாடிக் கட்டடம் | 25 |
| 26. | 7 + 7 = 14 | 27 |
| 27. | தூங்கும் விதம் | 28 |

# 1. பால முருகன்



சின்னச்சின்னக் குழந்தையம்மா
எங்கள் பாலமுருகன் - புன்
சிரிப்புக்காட்டி மயக்கிடுவான்
எங்கள் பாலமுருகன்

வண்ணமயில் மீதிருப்பான்
எங்கள் பாலமுருகன் - கையில்
வடிவேலும் வைத்திருப்பான்
எங்கள் பாலமுருகன்

பிள்ளையாரின் நல்லதம்பி
எங்கள் பாலமுருகன் - சிறு
பிள்ளைகளின் இனியதோழன்
எங்கள் பாலமுருகன்

கள்ளமில்லா உள்ளங்கொண்டால்
எங்கள் பாலமுருகன் - நம்மைக்
காத்தருள்வான், காத்தருள்வான்
எங்கள் பாலமுருகன்



# 2. ஒன்று சேர்தல்



கூட்டம் கூட்ட மாகவே
குருவி பறந்து சென்றிடும்.

குவியல் குவிய லாகவே
கொட்டிக் கற்கள் கிடந்திடும்.

கூறு கூறாய்ச் சந்தையில்
கொய்யாப் பழங்கள் விற்றிடும்.

குலைகு லையாய்த் திராட்சைகள்
கொடியில் அழகாய்த் தொங்கிடும்.

வரிசை வரிசை யாகவே
வாழை தோப்பில் நின்றிடும்.

மந்தை மந்தை யாகவே
மாடு கூடி மேய்ந்திடும்.

சாரை சாரை யாகவே
தரையில் எறும்பு ஊர்ந்திடும்.

நேரில் தினமும் பார்க்கிறோம்
நீயும் நானும் தம்பியே!





# 3. பார் பார்!



தரையின் மேலே
தொட்டி பார்

தொட்டி மேலே
செடியைப் பார்

செடியின் மேலே
பூவைப் பார்

பூவின் மேலே
வண்டைப் பார்

வண்டின் மேலே
பளபளக்கும்

வர்ணம் உண்டு;
அதையும் பார்;

# 4. அருமை நேரு





அருமை நேரு பிறந்தது
அலகா பாத்து நகரிலே

இளைஞர் நேரு படித்தது
இங்கி லாந்து நாட்டிலே.

தீரர் நேரு வாழ்ந்தது.
தில்லி நகரம் தன்னிலே.

இன்று நேரு வாழ்வது
எங்கள்
பிஞ்சு
நெஞ்சிலே

# 5. அ, ஆ




**அ, ஆ** என்றேனே.
அத்தை வீடு சென்றேனே.

**இ, ஈ** என்றேனே
இட்டலி எட்டுத் தின்றேனே.

**உ, ஊ** என்றேனே...
உடனே காபி குடித்தேனே.

**எ, ஏ** என்றேனே...
ஏப்பம் நன்றாய் விட்டேனே.

**ஐ** என்று சொன்னேனே.
அங்கே நீட்டிப் படுத்தேனே.

**ஒ, ஓ** என்றேனே,
ஒருமணி சென்று எழுந்தேனே.

**ஔ** என்று சொன்னேனே...
ஆடிப் பாடிக் குதித்தேனே.

**ஃ** என்று சொன்னேனே.
அக்கக் காவெனச் சிரித்தேனே.



# 6. பத்துப் பைசா பலூன்







பத்துப் பைசா விலையிலே
பலூன் ஒன்று வாங்கினேன்.

பலூன் ஒன்று வாங்கினேன்
பையப் பைய ஊதினேன்.

பையப் பைய ஊதவே
பந்து போல ஆனது.



பந்து போல ஆனபின்
பலமாய் நானும் ஊதினேன்.



பலமாய் ஊத ஊதவே
பானை போல ஆனது.

பானை போல ஆனதைக் காண
ஓடி வாருங்கள்!

விரைவில் வந்தால் பார்க்கலாம்.
அல்லது
வெடிக்கும் சத்தம் கேட்கலாம்!

# 7. எங்கே செல்லலாம்?





சைக்கிள் ஏறிக் கொள்ளலாம்;
சைதாப் பேட்டை செல்லலாம்.

காரில் ஏறிக் கொள்ளலாம்;
காரைக் குடிக்குப் போகலாம்.

இரயிலில் ஏறிக் கொள்ளலாம்;
இராமேஸ் வரம் செல்லலாம்.

கப்பல் ஏறிக் கொள்ளலாம்;
கல்கத் தாவை அடையலாம்.

பறவைக் கப்பல் ஏறலாம்;
பாரிஸ் நகரம் போகலாம்.

மனோ ரதத்தில் ஏறலாம்;
வைய மெல்லாம் சுற்றலாம்.!

# 8. வாழைப் பழம்



வாழைப் பழத்தில் பல உண்டு
வகைவகை யான பெயர் உண்டு.

பூவன், மொந்தன், ரஸ்தாளி,
பேயன், நேந்திரம், மலைவாழை

என்றே வகைகள் பலஉண்டாம்.
எல்லாம் எனக்குப் பிடித்தவையே.

தினமும் மிகவும் நான்விரும்பித்
தின்பது வாழைப் பழமேதான்!



# 9. என்ன கொண்டு வந்தேன்?





பழநி மலைக்குச் சென்று வந்தேன்;
பஞ்சா மிர்தம் கொண்டு வந்தேன்.

காசி நகரம் சென்று வந்தேன்;
கங்கை நீரைக் கொண்டு வந்தேன்.

திருப்பதிக்குச் சென்று வந்தேன்;
தித்திப்பு லட்டுக் கொண்டு வந்தேன்.

இராமேஸ் வரம் சென்று வந்தேன்;
என்ன நானும் கொண்டு வந்தேன்?


ஊ... ஊ... ஊ...

ஊ... ஊ... ஊ...

ஊது கின்ற சங்கில்
ஒன்று வாங்கி வந்தேன்.

# 10. அண்ணாமலையின் ஆசை









அண்ணாமலை, அண்ணாமலை,
என்ன சொன்னானாம்?
ஆனை முதுகில் ஏறிச் செல்ல
ஆசை என்றானாம்.

அண்ணா மலை, அண்ணா மலை,
என்ன சொன்னானாம்?
ஆற்றுக் குள்ளே படகு விடவே
ஆசை என்றானாம்.

அண்ணா மலை, அண்ணா மலை,
என்ன சொன்னானாம்?
ஆகா யத்தில் விமானம் ஓட்ட
ஆசை என்றானாம்

அண்ணா மலை, அண்ணா மலை,
என்ன சொன்னானாம்?
அமெரிக் கர்போல் நிலவில் இறங்க
ஆசை என்றானாம்!





# 11. செடி வளர்ப்பேன்



தாத்தா வைத்த தென்னையுமே
தலையால் இளநீர் தருகிறது.

பாட்டி வைத்த கொய்யாவும்
பழங்கள் நிறையக் கொடுக்கிறது.

அப்பா வைத்த மாஞ்செடியோ
அல்வா போலப் பழம்தருது.

அம்மா வைத்த முருங்கையுமே
அளவில் லாமல் காய்க்கிறது.

அண்ணன் வைத்த மாதுளையோ
கிண்ணம் போலப் பழுக்கிறது.

சின்னஞ் சிறுவன் நானும்ஒரு
செடியை நட்டு வளர்ப்பேனே!



# 12. வா, மழையே வா



கத்திக் கப்பல் செய்து வைத்தேன்.
கால்வாய் கூடத் தோண்டி வைத்தேன்.

வா, மழை யே, வா.
வா, மழை யே, வா.

சின்னச் செடியை நட்டு வைத்தேன்.
செப்புக் குடத்தை எடுத்து வைத்தேன்.

வா, மழையே, வா.
வா, மழை யே, வா.

வீதிப் பக்கம் வந்து நின்றேன்.
மேலே மேலே பார்த்து நின்றேன்.

வா, மழையே வா.
வா, மழையே வா.

# 13. தங்கமும் சிங்கமும்



எங்கள் வீட்டுப் பூனை அம்மா
இரண்டு பிள்ளை பெற்றாள்.
இரண்டு பிள்ளை பெற்றாள் - அவள்
என்ன பேரு வைத்தாள்?

தங்கம் என்றோர் பிள்ளை பெயராம்.
தவிட்டு நிறத்துப் பிள்ளை.
தவிட்டு நிறத்துப் பிள்ளை - அது
தப்பே செய்வ தில்லை.

சிங்கம் என்றோர் பிள்ளை பெயராம்;
தீரம் உடைய பிள்ளை.
தீரம் உடைய பிள்ளை - அது
தீங்கே செய்வ தில்லை.

தங்கம், சிங்கம் இரண்டும் அந்தத்
தாய்க்கு நல்ல பிள்ளை - இதில்
சற்றும் ஐயம் இல்லை!

# 14. ஆண்டவன் தந்த கை







ஆண்டவன் தந்த கை எதற்கு?
அள்ளிச் சோறு தின்பதற்கு.

ஆண்டவன் தந்த கை எதற்கு?
அழுக்குத் தேய்த்துக் குளிப்பதற்கு.



ஆண்டவன் தந்த கை எதற்கு?
ஆடை ஒழுங்காய் அணிவதற்கு.

ஆண்டவன் தந்த கை எதற்கு?
அழகாய் எழுதிப் படிப்பதற்கு.



ஆண்டவன் தந்த கை எதற்கு?
அனுதினம் வேலை செய்வதற்கு.

ஆண்டவன் தந்த கை எதற்கு?
அனைவருக் குதவி செய்வதற்கு.

ஆண்டவன் தந்த கை எதற்கு?
அவரை நன்றாய்த் தொழுவதற்கு.



# 15. சங்கு சக்கரச் சாமி



சங்கு சக்கரச் சாமியாம்;
சாய்ந்து படுத்துக் கிடக்குமாம்;
எங்கே, எங்கே, தெரியுமா?
எங்கள் ஊருக் கோயிலில்.

நீட்டிப் படுத்துக் கிடக்குமாம்;
நீல வண்ணச் சாமியைப்
பாட்டுப் பாடி எழுப்பலாம்.
கூட்ட மாக வாருங்கள்.

# 16. யார்? யார்? யார்?





தொங்க விட்ட சட்டையைத்
தூக்கிக் கீழே போட்டவன்

யார், யார், யார்?

எழுதி வைத்தத் தாள்களை
இங்கும் அங்கும் இறைத்தவன்

யார், யார், யார்?

சன்னல் கதவைப் பட்டெனச்
சாத்தி விட்டுச் சென்றவன்

யார், யார், யார்?

அருகில் நிற்கும் மரங்களை
அசைத்தே ஆடச் செய்தவன்


யார், யார், யார்?

"உஸ் உஸ்' என்று மெல்லவே.
ஊதி ஊதிச் செல்பவன்

யார், யார், யார்?

கண்டு பிடிக்க முடியுமா?
காண முடியாக் காற்றேதான்!

# 17. நிலா நிலா



"நிலா, நிலா, ஓடிவா...
நில்லாமல் ஓடிவா"
பல காலம் இப்படிப்
பாடிப் பயன் இல்லையே!

மலை மேலே ஏறிநீ
வருவாய் என்றே எண்ணினோம்.
மல்லி கைப்பூக் கொண்டுநீ
தருவாய் என்றும் பாடினோம்.

எத்த னைநாள் பாடியும்
ஏனோ நீயும் வரவில்லை.
சத்தம். போட்டுப் பாடியும்
சற்றும் நெருங்கி வரவில்லை.

உன்னை விரும்பி அழைத்துமே.
ஒடி நீ வராததால்
விண்க லத்தில் ஏறியே
விரைவில் வருவோம் உன்னிடம்!



# 18. தெரியுமா தம்பி?


நெட்டை யான காலுடனே
நீள மான கழுத்துடனே
சுட்டுப் பொசுக்கும் மணலில்கூடச்
சுமையைத் தூக்கிச் செல்லும் அது

என்ன தெரியுமா? - தம்பி
என்ன தெரியுமா?




முறத்தைப் போன்ற காதுடனே
முகத்தில் ஒற்றைக் கையுடனே
உரலைப் போன்ற காலுடனே
ஊர்வ லத்தில் வருமேஅது

என்ன தெரியுமா? தம்பி
என்ன தெரியுமா?



பட்டுப் போன்ற உடலுடனே
பலநி றத்தில் இறகுடனே
கட்டை யான குரலுடனே
களித்து நடனம் ஆடும்அது

என்ன தெரியுமா? தம்பி
என்ன தெரியுமா?



வட்ட மான முகத்துடனே
வளைந்தி ருக்கும் மூக்குடனே
முட்டை போன்ற கண்ணுடனே
வேட்டை ஆடும் இரவில்அது

என்ன தெரியுமா? தம்பி
என்ன தெரியுமா?



**விடைகள்** - ஒட்டகம், யானை, மயில், ஆந்தை

# 19. கொய்யாப் பழம்



ஐயா வீட்டுக் கொய்யாப் பழம்
ஆசை யாகத் தந்த பழம்.

கையில் எடுத்து வாயில் வைத்துக்
கடிக்கக் கடிக்க இனிக்கும் பழம்.


ஐயா வீட்டுக் கொய்யாப் பழம்
ஆசையாகத் தந்த பழம்.

நெய்யில் செய்த லட்டுப் போல
நேர்த்தி யாக இருக்கும் பழம்

வெயில் நேரம் தின்னத் தின்ன
மிகவும் சுவை கொடுக்கும் பழம்.

ஐயா வீட்டுக் கொய்யாப் பழம்
ஆசை யாகத் தந்த பழம்.

# 20. வெள்ளைக் கொக்கு



"ஆட வில்லை; அசைய வில்லை;
அடடே, பளிங்குச் சிலைபோல்
ஆற்றின் ஓரம் நிற்கும் அந்த
அழகுக் கொக்கைப் பாராய்!

நீண்ட கால்கள், நீண்ட கழுத்து;
நிறமோ வெள்ளை யாகும்.
காண்ப தற்குச் சாது. ஆனால்
கவன மாக நோக்கும்.

ஈட்டி போன்ற அலகை முன்னால்
நீட்டிக் கொண்டு நிற்கும்.
இரையைக் கண்ட வுடனே அதுவும்
எட்டி விரைந்தே பிடிக்கும்.

மீன்கள், நண்டு, தவளை, பூச்சி
விரும்பிப் பிடித்துத் தின்னும்
மெல்ல நாமும் நெருங்கிச் சென்றால்.
விரைந்து மேலே பறக்கும்!

# 21. அன்னம்



பாலைப் போன்ற வெள்ளை நிற
அன்னத்தைப் பாராய் - அது
படகு போலே அசைந்தி டாமல்
நீந்துது பாராய்.

நீள மாக வளைந்தி ருக்கும்.
கழுத்தி னைப் பாராய் - அதோ
நீரில் தலையை மீனைப்
பிடிக்குதுப் பாராய்.

அன்னை முதுகில் ஏறிச் செல்லும்
குஞ்சுகள் பாராய் - அவை
அச்சம் வந்தால் சிறகுக் குள்ளே
ஒளிவதைப் பாராய்.

கன்னங் கரிய நிறத்தில் கூட
அன்னம் இருக்குதே! - அதைக்
காண லாமே மிருகக் காட்சி
சாலை தன்னிலே!

# 22. புகை விடாத இரயில்

சம்பத்துக்கு வீடு உண்டு
தாம்ப ரத்திலே.

பட்டுவுக்கு வீடு உண்டு
பல்லா வரத்திலே.

பாலுவுக்கு வீடு உண்டு
பரங்கி மலையிலே.

மாலதிக்கு வீடு உண்டு
மாம்ப ழத்திலே.

கோமதிக்கு வீடு உண்டு,
கோடம் பாக்கத்தில்.


குமரனுக்கு வீடு உண்டு
குரோம் பேட்டையில்

மீனாவுக்கு வீடு உண்டு
மீனம் பாக்கத்தில்.

சௌந்தருக்கு வீடு உண்டு
சைதாப் பேட்டையில்

இவர்கள் வீடு செல்லவே
ஏறு ஏறு இரயிலிலே

புகைவி டாத இரயிலிலே
போக லாமே விரைவிலே!





# 23. உதவும் கத்தி



பென்சில் சீவ உதவிடும்
பெரிய பழத்தை நறுக்கிடும்

மரத்துப் பட்டை சீவிடும்
வாழை இலையை அறுத்திடும்

ஓலை நறுக்க உதவிடும்
உடைத்த தேங்காய் கீறிடும்.

கயிற்றை அறுக்க உதவிடும்
காய் கறிகள் நறுக்கிடும்

நன்மை செய்ய நித்தமும்
நமக்கு உதவும் கத்தியால்

கவனக் குறைவி னாலேநாம்
காயப் படுத்திக் கொள்வதா?

# 24. வால்



ஈயை ஓட்ட என்றும் உதவும்
பசுவின் வால்,

எதிர்த்து நீந்தத் துடுப்பாய் உதவும்
மீனின் வால்,

குளிரில் உடம்பைச் சூடுப் படுத்தும்
அணிலின் வால்,

கிளையில் மாட்டித் தொங்கிட உதவும்
குரங்கின் வால்,

கொடிபோல் ஆட்டி, ஆபத்து உணர்த்தும்
முயலின் வால்.

கோபம் வந்தால் சிலிர்த்து நிற்கும்
பூனை வால்,

நன்றியைக் காட்ட நன்றாய் உதவும்
நாயின் வால்,

நமக்கும் இருந்தால் எப்படி உதவும்?
எண்ணிப் பார்.

# 25. எட்டு மாடிக் கட்டடம்



எட்டு மாடிக் கட்ட டத்தில்
ஏறி நிற்கிறேன்
இங்கி ருந்தே சென்னை முழுதும்
நன்கு பார்க்கிறேன்.

கற்ப காம்பாள் கோயில் அதோ
கண்ணில் தெரியுது.
கடற் கரையில் சின்னச் சின்ன
உருவம் தெரியுது

கோட்டை முன்னால் கம்பம் ஒன்றில்
கொடி பறக்குது
கூவம் ஆறு குறுக்கும் நெடுக்கும்
வளைந்து செல்லுது

தலையில் வகிடு எடுத்த தைப்போல்
சாலை தெரியுது
தவழும் குழந்தை போல மோட்டார்
வண்டி நகருது


நிறையக் கப்பல் துறை முகத்தில்
நின்றி ருக்குது.
நிமிர்ந்து நிற்கும் கோபு ரங்கள்
எங்கும் தெரியுது.

உயர்ந்த கூண்டு நாலு புறமும்-
மணியைக் காட்டுது.
உச்சி யிலே சிலுவை கூட
நன்கு தெரியுது

புகையில் லாத இரயிலும் ஊரில்
புகுந்தே ஓடுது
பொம்மை இரயில் போலே அதுவும்
எனக்குத் தோணுது

மரங்கள் எல்லாம் வீடுகளை
மறைத்து நிற்குது
மாமா வீடு எங்கே? எங்கே?
மனசு தேடுது!

# 26). 7 + 7 = 14



ஏழும் ஏழும் பதினாலாம்
எலியா ருக்கு முழம்வாலாம்.

அறைக்குள் எலியார் புகுந்தாராம்
அங்கும் இங்கும் பார்த்தாராம்.

இரண்டு தட்டில் பணியாரம்
இருந்தது கண்டு மகிழ்ந்தாராம்.

கடித்துக் கடித்துத் தின்றாராம்.
கணக்கைக் கூட்டிப் பார்த்தாராம்.

ஏழும் ஏழும் பதினாலாம்
எலியார் ஏப்பம் விட்டாராம்!

# 27. தூங்கும் விதம்







ஒட்டைச் சிவிங்கி நின்று கொண்டே
நன்கு தூங்கிடும்.
உயரே வௌவால் தலைகீ ழாகத்
தொங்கித் தூங்கிடும்.



சிட்டுக் குருவி மரத்தின் கிளையைப்
பற்றித் தூங்கிடும்
சின்னப் பாப்பா தொட்டி லுக்குள்
படுத்துத் தூங்கிடும்.

கண்ணை மூடி நாமெல் லாரும்
நன்கு தூங்குவோம்.
கண்ணைத் திறந்த படியே மீனும்
பாம்பும் தூங்கிடும்.





என்ன கார ணத்தி னாலே
என்று தெரியுமா?
இவைக ளுக்குக் கண் ணைமூட
இமைகள் இல்லையே!



குழந்தைக் கவிஞர்

# அழ. வள்ளியப்பா

- **"குழந்தைக் கவிஞர்"** என அன்போடு அழைக்கப்படுபவர்.
- **'பிள்ளைக் கவியரசு'** என்ற சிறப்புப் பட்டம் பெற்றவர்.
- 50-க்கு மேற்பட்ட குழந்தைப் புத்தகங்களை எழுதியவர், இவற்றில் 2 புத்தகங்களுக்கு இந்திய அரசினரும், 6 புத்தகங்களுக்குத் தமிழக அரசினரும் பரிசுகள் வழங்கியுள்ளனர்.
- 1950-ல் குழந்தை எழுத்தாளர் சங்கத்தை நிறுவிப் பல நல்ல குழந்தை எழுத்தாளர்களை உருவாக்கியவர்.
- ஜனாதிபதி டாக்டர் ஜாகிர் ஹுசேன், ஜனாதிபதி பக்ருதீன் அலி அகமது இருவராலும் கேடயங்கள் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றவர்.
- கவிமணி, நாமக்கல் கவிஞர், ராஜாஜி, கல்கி, டாக்டர் சேதுப் பிள்ளை, டாக்டர் மு.வ. போன்ற அறிஞர்களின் பாராட்டைப் பெற்றவர்.

அழ. வள்ளியப்பா அவர்கள்,

யானை, மயில், பறவை, எலி, ஒட்டகச் சிவிங்கி முதலிய

விலங்குகளோடும் மழை, பூ செடிகொடி முதலிய இயற்கையோடும்

பயணிக்கும் குழந்தைகளின் வாழ்வியலை அழகுத் தமிழில்,

பாடல் வடிவில் காட்சிப்படுத்தியதை அனைவரும் கண்டு மகிழ்ந்தோம்.

அதனைப் பாடியும் உலா வந்தோம்.

இனி இவரது, பாலைவனத்தில் கரை தேடும் கப்பலாகிய, சோனாவின்

பயணக் கதையை அடுத்தப் புத்தகத்தில் படித்து மகிழலாம்.

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com